**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, மன்னார்குடி**

முன்னிலை: திரு.ஜெ.தமிழ்முருகன்,பி.ஏ.,பி.எல்.,

நீதித்துறை நடுவர் எண்.1, மன்னார்குடி

2026 ஆம் ஆண்டு ஜீன் மாதம் 02 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை

**ஆண்டுப் பட்டிகை வழக்கு எண்.165/2017**

**CASE SUMMARY**

| Sl.No. | Description | Remarks | |
|---|---|---|---|
| 1 | The period of remand of the accused | Remanded on : Nil<br>Released on : Surrender – 24.02.2017 (AB) | |
| 2 | The date of filing of complaint/final report in the Court | -- | |
| 3 | The date of committal of the case to the Court of Sessions | Not Applicable | |
| 4 | The date of Questioning of accused U/S 228, 240, 246 and 251 of the Code of Criminal producer 1973 as the case may be | -- | |
| 5 | Filing of all miscellaneous petitions and their result including the results on challenge before superior Court. Except routine petitions like petition under section 317 of the Code . | U/S 359 BNSS Petition filed on 25.05.2025 and Dismissed . | |
| 6 | Date of examination in Chief and Cross examination of a witness | P.W.1 – 25.05.2025 | P.W.4 – 25.05.2025 |
| | | P.W.2 – 25.05.2025 | P.W.5 – 25.05.2025 |
| | | P.W.3 – 25.05.2025 | |
| 7 | Date of examination of the accused under section 351(1)(b) BNSS of the Court | 26.05.2026 | |
| 8 | Details of Abscondence of an accused and his appearance /production, as the case may be | Not Applicable | |
| 9 | Grant of stay by superior Courts and the results thereof | Not Applicable | |

**// எதிராக//**

| | | |
|---|---|---|
| **அரசுக்காக: காவல் ஆய்வாளர்,**<br>மன்னார்குடி நகர காவல் நிலையம்,<br>குற்ற எண். 143/2017<br>ச/பி.294(பி), 352, 506(1) இதச. | | .............குற்ற முறையீட்டாளர் |
| | /எதிர்/ | |
| கலைமணி,வயது 45/2020, | | |



JAYARAMAN TAMIZHMURUGAN

Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.06.02 19:36:02 +0530

| | | |
|---|---|---|
| த/பெ.நடராஜன் ,<br>மேலத்தெரு, மேலவாசல்,<br>மன்னார்குடி தாலுக்கா. | | ……… எதிரி |

இவ்வழக்கானது கடந்த 16.12.2017 ஆம் தேதியன்று இந்நீதிமன்ற கோப்புக்கு எடுக்கப்பட்டு, இது நாள் வரை இந்நீதிமன்றத்தின் கவனமான பரிசீலனையில் இருந்து வந்து, இன்று 26.05.2026 என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது குற்ற முறையீட்டாளர் தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் திருமதி. D.துர்காதேவி, B.A.,B.L., நிலை.2 அவர்களும் எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.துரை.வீரையன்,பி.ஏ.,பி.எல்., அவர்கள் முன்னிலையாகி, இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்த பின்னர் இன்று (02.06.2026) இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்...............

**//தீர்ப்புரை//**

**1. அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்.**

கடந்த 11.02.2017 ஆம் தேதி காலை 11.00 மணியளவில் மன்னார்குடி நகர காவல்நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியான மேலவாசல் திருமுருகன் உயர்நிலைப்பள்ளி கட்டிடத்தில் கல்விக்குழு கூட்டம் நடைபெற்றதில் வாதி அறிவழகன் தனது பதவி உயர்வு குறித்து தலைவரிடம் விளக்கம் கொடுக்கும்போது இவ்வழக்கில் கண்ட எதிரி கலைமணி என்பவர் வாதியை பார்த்து என்னடா புண்ட மவனே உன்னதான் பதவி உயர்வு இல்லாம செய்து விட்டேனே எங்கடா நுழைகிறாய் என்று திட்டி முகத்தில் கையால் குத்தியும் பள்ளியில் நுழைந்தால் கொன்று விடுவேன் என்று மிரட்டியும் குற்றம் புரிந்துள்ளதாக எதிரியின் செய்கையானது இதச பிரிவுகள் 294(பி), 352, 506(1) ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் என மன்னார்குடி நகர காவல் உதவி ஆய்வாளர் அவர்கள் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**2. நகல் வழங்கல்**

எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜரானதும் எதிரிக்கு **கு.வி.மு.ச பிரிவு 207** கீழ் நகல்கள் இலவசமாக வழங்கப்பட்டன.

**3. குற்றச்சாட்டு வனைதல்**

எதிரியிடம் குற்றம் பற்றி வினவ போதிய முகாந்திரம் இருந்ததால் எதிரி மீது இதச பிரிவுகள் **கீழ் கு.வி.மு.ச பிரிவு 240(1) ன்** படி குற்றச்சாட்டு வனைந்து விளக்கிக் கூறி வினவியபோது எதிரிகள் குற்றச்சாட்டை மறுத்தார்கள். எனவே அரசு தரப்பு சாட்சிகள் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது. அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.5 வரையான சாட்சியங்கள் விசாரிக்கப்பட்டும், சான்றாவணங்கள் அ.சாஆ.1 முதல் அ.சாஆ.8 வரை குறியீடு செய்யப்பட்டுள்ளது . சான்று பொருள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

JAYARAMAN TAMIZHMURUGAN

Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.06.02 19:36:09 +0530

**4.அரசு தரப்பு சாட்சியங்களிலிருந்து புலப்படும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்**

**அ.சா .1 அறிவழகன்** தனது சாட்சியத்தில் தான் மேலவாசல் திருமுருகன் அரசு உதவி பெறும் தொடக்கப்பள்ளியில் ஆசிரியராக பணி செய்து வருகிறேன் என்றும்,ஆஜர் எதிரி தன்னுடன் உயர்நிலை பள்ளியில் தலைமை ஆசிரியராக பணிபுரிபவர் ஆவார் என்றும், கடந்த 11.02.2017ம் தேதியன்று காலை 11.00 மணியளவில் திருமுருகன் உயர்நிலை பள்ளிக்கட்டிடத்தில் பள்ளி கல்விக்குழு கூட்டம் நடைபெற்றது என்றும்,அந்த கூட்டத்தில் வந்திருந்தவர்களிடையே சச்சரவு ஏற்பட்டு தள்ளுமுள்ளு ஏற்பட்டது என்றும்,தான் அந்த சம்பவத்தில் கீழே விழுந்துவிட்டேன் என்றும்,தன்னுடைய கீழ் உதட்டில் காயம் இருந்தது என்றும், தான் மருத்துவமனை செல்லவில்லை என்றும்,ஆஜர் எதிரி அந்த கூட்டத்தில் கலந்து கொண்டதால் அவர்களுக்கும் ,தனக்கும் இருந்த மனவருத்தத்தின் அடிப்படையில் அவர் தான் தன்னை தாக்கியிருப்பார் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் புகார் வாக்குமூலம் அளித்துவிட்டேன் என்றும்,நீதிமன்றத்தில் காட்டப்படும் புகார் வாக்குமூலம் தான் கொடுத்தது தான் என்றும், அதிலுள்ள கையொப்பம் தன்னுடையது தான் என்றும், புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், இச்சம்பவம் குறித்து போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியமளித்துள்ளார்.

**அ.சா.2 தனராஜ்** தனது சாட்சியத்தில் தான் விவசாய வேலை செய்து வருகிறேன் என்றும்,அ.சா.1 மற்றும் எதிரி தனக்க தெரியும் என்றும்,இருவரும் என்ன பிரச்சனை என்று தனக்கு தெரியாது என்றும்,வழக்கு குறித்து எந்த விபரமும் தெரியாது என்றும்,போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும்,சாட்சியமளித்துள்ளார்.

**அ.சா.3 அன்பழகன்** தனது சாட்சியத்தில் தான் மன்னார்குடி வழக்கறிஞராக தொழில் செய்து வருகிறேன் என்றும்,அ.சா.1 மற்றும் எதிரியை தனக்கு தெரியும் என்றும், இருவருக்கும் என்ன பிரச்சனை என்று தனக்கு தெரியாது என்றும், வழக்கு குறித்து எந்த விபரமும் தெரியாது என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும் சாட்சியமளித்துள்ளார்.

**அ.சா.4 சந்திரன்** தனது சாட்சியத்தில் தான் மேலவாசல் திருமுருகன் பள்ளியில் அலுவலக உதவியாளராக வேலை செய்து வருகிறேன் என்றும்,அ.சா.1 மற்றும் எதிரி தனக்கு தெரியும் என்றும், நீதிமன்றத்தில் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 1வது கையொப்பம் தன்னுடையது தான் என்றும், மேற்படி கையொப்பம் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும்,மேற்படி கையொப்பத்தை தான் சொந்த வேலையாக காவல் நிலையம் சென்றிருந்தபோது போலீசார் கேட்டுக்கொண்டதன் பேரில் செய்து கொடுத்தேன் என்றும்,வழக்கு சம்பந்தமாக எந்த விபரமும் தெரியாது என்றும், போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்றும்,சாட்சியமளித்துள்ளார்.

JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.06.02 19:36:16 +0530

**அ.சா.5 சி.தங்கதுரை** சிறப்பு உதவி ஆய்வாளர் தனது சாட்சியத்தில் தன் தற்போது மன்னார்குடி நகர காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன் என்றும், கடந்த 11.02.2017 ஆம் தேதியன்று மன்னார்குடி நகர காவல்நிலைய உதவி ஆய்வாளர் உஷாராணி நிலையப்பொறுப்பில் இருந்தபோது மேலவாசலை சேர்ந்த வீரபாண்டியன் மகன் அறிவழகன் என்பவர் நிலையம் ஆஜராகி புகார் ஒன்றை கொடுத்தார் என்றும், மேற்படி புகார் அசாஆ. 4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும் அதன் அடிப்படையில் நிலைய மனு எண்.41/2017 மனு விசாரணைக்குப்பின் 15.02.2017 ஆம் தேதி நிலையக்குற்ற எண்143/2017 இதச பிரிவுகள் 294(பி), 323, 506(1)ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார் என்றும், மேற்படி முதல் தகவல் அறிக்கை அசாஆ. 5 அக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும் மேற்படி வழக்கை மேல் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட உதவி ஆய்வாளர் அன்றைய தினமே 11.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் சந்திரன் மற்றும் கந்தசாமி ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தினை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் வரைபடம் தயார் செய்துள்ளார் என்றும் மேற்படி பார்வை மகசர் மற்றும் வரைபடம் அசாஆ. 6,7 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், பட்டியல் சாட்சிகள் 1 முல் 6 வரையிலானவர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்துள்ளார் என்றும், சம்பவம் உண்மை என தெரியவந்ததும் எதிரியை தேடியபோது முன்பிணையம் பெற்று சென்ற விவரம் தெரிந்து கொண்டார் என்றும் வாதியானவர் சிகிச்சைக்கு மருத்துவமனை செல்லவில்லை என்று தெரியவந்ததால் இவ்வழக்கின் சட்டப்பிரிவினை 294(பி), 323, 506(1) இதச விலிருந்து 294(பி), 352,506(1)ன் கீழ் சட்டப்பிரிவு மாற்று அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும் மேற்படி சட்டப்பிரிவு மாற்று அறிக்கை அசாஆ. 8 அக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும் இத்துடன் அவரது விசாரணையை முடித்து எதிரியின் செய்கையானது இதச பிரிவுகள் 294(பி), 352,506(1)ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் என குற்ற இறுதியறிக்கை 22.03.2017 ஆம் தேதி தாக்கல் செய்துள்ளார்.

**5. எதிரியிடம் பிரிவு 351 (1)(b) BNSS ன் கீழ் வினவுதல்**

மேற்படி அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியத்திலிருந்து இவ்வழக்கின் எதிரிக்கு பாதகமாக தோன்றியவற்றை தொகுத்து பிரிவு 351(1)(b) BNSS ன் கீழ் வினவியபோது எதிரி பொய் சாட்சியம் என்றும் பொய் வழக்கு என்றும் கூறி மறுத்தார். எதிரி தரப்பில் சாட்சியாக யாரையும் விசாரிக்கவோ, ஆவணங்கள் எதுவும் குறியிடப்படவோ இல்லை.

**6. தீர்மானிக்கப்படவேண்டிய விஷயம்**

இவ்வழக்கின் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா? அல்லது இல்லையா? என்பதே தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை ஆகும்.



JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.06.02 19:36:23 +0530

**7.** அரசுத்தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றங்கள் நிரூபிக்கப்பட்டுள்ளது என வாதிட்டார்.

**8.** எதிரி தரப்பு வழக்கறிஞர் எதிரி மீது புகார்தாரரால் பொய்யான புகார் கொடுக்கப்பட்டு வழக்கு ஏற்படுத்தப்பட்டுள்ளது என வாதிட்டார்.

**9. தீர்வு :**

இவ்வழக்கின் எதிரி மீது இதச பிரிவுகள் 294(பி), 352, 506(1) இதச–ன் கீழ் குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ளது.மேலும், அரசுத்தரப்பில் அ.சா.1 முதல் 5 வரையான சாட்சியங்கள் விசாரிக்கப்பட்டும், பட்டியல் சாட்சி 3,6,7 அரசுத்தரப்பில் விசாரணை செய்யப்படாமல் நீக்கம் செய்யப்பட்டுள்ளது. பட்டியல் சாட்சி 7 திருமதி. உஷாராணி என்பவருக்கு பதிலாக இவ்வழக்கின் சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.சி.தங்கதுரை அவர்கள் அ.சா.5 ஆக விசாரணை செய்யப்பட்டும்,அ.சா.4 முதல் அ.சா.8 வரையான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வழக்கில் புகார்தாரர் சாட்சியாக அ.சா. 1 ஆகவும், கண்ணுற்ற சாட்சியாக அ.சா.2,3 ஆகவும்,வரைப்படம் மற்றும் பார்வை மகசர் சாட்சியாக அ.சா.4, புலன் விசாரணை அதிகாரி உஷாதேவி என்பவருக்கு பதில் கூடுதல் சாட்சியாக அ.சா.5 தங்கதுரை என்பவரை விசாரித்தார்கள்.

**முதலாவது குற்றச்சாட்டிற்கு தீர்வு**

இந்நீதிமன்றம் எதிரி மீதான முதலாவது குற்றச்சாட்டான இதச பிரிவு 294(பி)ஐ ஆய்வு செய்யும் போது, கடந்த 11.02.2017 ஆம் தேதி காலை 11.00 மணியளவில் மன்னார்குடி நகர காவல்நிலைய எல்லைக்குட்பட்ட பகுதியான மேலவாசல் திருமுருகன் உயர்நிலைப்பள்ளி கட்டிடத்தில் கல்விக்குழு கூட்டம் நடைபெற்றதில் வாதி அறிவழகன் தனது பதவி உயர்வு குறித்து தலைவரிடம் விளக்கம் கொடுக்கும்போது இவ்வழக்கில் கண்ட எதிரி கலைமணி என்பவர் வாதியை பார்த்து என்னடா புண்ட மவனே உன்னதான் பதவி உயர்வு இல்லாம செய்து விட்டேனே எங்கடா நுழைகிறாய் என்று திட்டியதாக எதிரி மீது இதச பிரிவு 294(பி)ன் கீழ் குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ளது. இதச பிரிவு 294(பி) ன் படி ஆபாசமான வார்த்தையானது ..........

> "ஆபாசமான வார்த்தையானது ஒரு பொதுவான இடத்தில் பேசப்பட்டிருக்கவேண்டும். எதிரியால் பேசப்பட்ட வார்த்தையால் வாதிக்கு பாதிப்பு ஏற்பட்டிருக்க வேண்டும். அவ்வாறு பேசியதால் ஏற்பட்ட பாதிப்பை வாதி தன்னுடைய முதல் விசாரணையில் சாட்சியமளித்திருக்கவேண்டும். மேற்படி குற்றச்சாட்டினை அரசுத்தரப்பு சாட்சியங்களோடு பரிசீலிக்கும்போது...

வழக்கின் புகார்தாரர் அ.சா.1 அவரது முதல் விசாரணையில்......" தான் மேலவாசல் திருமுருகன் அரசு உதவி பெறும் தொடக்கப்பள்ளியில் ஆசிரியராக பணி செய்து வருகிறேன் ஆஜர் எதிரி தன்னுடன் உயர்நிலை பள்ளியில் தலைமை ஆசிரியராக


JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.06.02 19:36:30 +0530

பணிபுரிபவர் ஆவார் என்றும், கடந்த 11.02.2017 ம் தேதியன்று காலை 11.00 மணியளவில் திருமுருகன் உயர்நிலை பள்ளிக்கட்டிடத்தில் பள்ளி கல்விக்குழு கூட்டம் நடைபெற்றது என்றும்,அந்த கூட்டத்தில் வந்திருந்தவர்களிடையே சச்சரவு ஏற்பட்டு தள்ளுமுள்ளு ஏற்பட்டதாகவும் அந்த சம்பவத்தில் கீழே விழுந்துவிட்டதாகவும் எதிரிக்கும் தனக்கும் இருந்த மன வருத்தத்தின் காரணமாக அவர் மீது சந்தேகத்தின் அடிப்படையில் புகார் வாக்குமூலம் கொடுத்து விட்டதாக சாட்சியமளித்து, மேற்படி அசா 1 அன்பழகன் எதிரியுடன் சமரசம் செய்து கொண்டு ***"சமரச மனு"*** *தாக்கல் செய்து மேற்படி* நீதிமன்றத்தில் காட்டப்படும் சமரச மனுவில் உள்ள கையொப்பம் தன்னுடையதுதான் என்றும், சமரச மனுவில் உள்ள தனது கையொப்பம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்துள்ளதாக சாட்சியமளித்துள்ளதாலும், அ.சா.3 மற்றும் அ.சா.4 ஆகிய சாட்சிகள் இதச பிரிவு 294(பி)ஐ ஈர்க்கும் வகையில் சாட்சியம் எதுவும் முன் வைக்காத நிலையில் எதிரிக்கு எதிராக இந்நீதிமன்றத்தால் வனையப்பட்ட இதச பிரிவு 294(பி)ன் கீழான குற்றச்சாட்டானது போதிய ஆதாரத்துடன் அரசுத்தரப்பால் மெய்ப்பிக்கப்பட்டவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**<u>இரண்டாவது குற்றச்சாட்டிற்கு தீர்வு</u>**

இந்நீதிமன்றம் இவ்வழக்கின் எதிரி மீதான இரண்டாவது குற்றச்சாட்டான இதச பிரிவு 352 ஐ ஆய்வு செய்யும்போது, அசா1 தான் சம்பவத்தில் கீழே விழுந்துவிட்டேன் தன்னுடைய கீழ் உதட்டில் காயம் ஏற்பட்டது தான் மருத்துவமனை செல்லவில்லை என்றும்,ஆஜர் எதிரி அந்த கூட்டத்தில் கலந்து கொண்டதால் அவருக்கும் ,தனக்கும் இருந்த மனவருத்ததின் அடிப்படையில் அவர் தான் தன்னை தாக்கியிருப்பார் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் புகார் வாக்குமூலம் அளித்து விட்டதாக சாட்சியமளித்துள்ள நிலையிலும், அ.சா.1 எதிரியும், நீதிமன்றத்திற்கு வெளியே சமரசம் ஆகிவிட்டதாக சாட்சியமளித்துள்ள நிலையில் 1,2 எதிரிக்கு எதிராக இந்நீதிமன்றத்தால் வனையப்பட்ட இதச பிரிவு 352 ன் கீழான குற்றச்சாட்டானது போதிய ஆதாரத்துடன் அரசுத்தரப்பால் மெய்ப்பிக்கப்பட்டவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**<u>மூன்றாவது குற்றச்சாட்டிற்கு தீர்வு</u>**

இந்நீதிமன்றத்தால் எதிரி மீது சுமத்தப்பட்ட 3 குற்றச்சாட்டான இதச பிரிவு 506(1) ஐ ஆய்வு செய்யும்போது, பள்ளியில் நுழைந்தால் கொன்று விடுவேன் என்று கொலை மிரட்டல் விடுத்துள்ளதாக எதிரி மீது இதச பிரிவு 506(1)ன் கீழ் குற்றச்சாட்டு வனையப்பட்டுள்ளது.

மேற்படி குற்றச்சாட்டினை அரசு தரப்பு சாட்சியங்களோடு பரிசீலிக்கும்போது அ.சா.1 அவரது முதல் நீதிமன்ற விசாரணையில் மேற்படி எதிரி மீது இதச பிரிவு 506(2) ஈர்க்கும் வகையில் எதிரி தன்னை கொலை செய்து விடுவதாக மிரட்டல் விடுத்ததால் தனக்கு எதிரி சொன்னதுபோல் தன்னை கொன்று விடுவார் என்ற உயிர் பயமோ, பீதியோ ஏற்பட்டதாக வாதி நீதிமன்றத்தில் சாட்சியம் எதுவும் முன் வைக்காத நிலையிலும், அதேபோல் சம்பவத்தினை கண்ணுற்ற சாட்சிகள் யாரும் சாட்சியம் அளிக்காத நிலையிலும், எதிரிக்கு எதிராக வனையப்பட்ட பிரிவு 506(1) இதசவின் கீழான குற்றச்சாட்டானது போதுமான சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் வழி எல்லாவித



JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.06.02 19:36:39 +0530

சந்தேகங்களுக்கும் அப்பாற்பட்டு அரசு தரப்பால் நிரூபிக்கப்படவில்லை என்றே இந்நிதிமன்றம் கருதுகின்றது.

10.எனவே,மேலே விசாரிக்கப்பட்ட சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களிலிருந்து எதிரிக்கு எதிராக இந்நீதிமன்றத்தால் வனையப்பட்ட இவ்வழக்கின் எதிரி மீதான இ.த.ச பிரிவுகள் 294(பி), 352, 506(1) ன் கீழான குற்றச்சாட்டுகள் எல்லாவித சந்தேகங்களுக்கும் அப்பாற்பட்டு அரசு தரப்பால் மெய்ப்பிக்கப்படவில்லை என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

11. இறுதியாக , இவ்வழக்கின் எதிரி மீதான இ.த.ச பிரிவுகள் 294(பி), 352, 506(1) ன் படியும், ன் கீழ் குற்றவாளி அல்ல என இந்நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்பட்டு, பிரிவு 271(1) BNSS ன் கீழ் எதிரியை இந்நீதிமன்றம் விடுதலை செய்து தீர்ப்பு அளிக்கின்றது.

12. இவ்வழக்கில் வழக்குச்சொத்து எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. அது குறித்த உத்தரவு ஏதும் இல்லை.

13. எதிரி எழுதிக்கொடுத்த பிணைப்பத்திரம் மேல்முறையீட்டுக் காலத்திற்கு பிறகு தானாக ரத்தாக வேண்டியது.

இத்தீர்ப்புரை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு , பிழை நீக்கம் செய்யப்பட்டு , இன்று 2026 ஆம் ஆண்டு ஜீன் மாதம் 02 ஆம் நாள் என்னால் திறந்த இந்நீதிமன்ற அவையறிய பகரப்பட்டது.

JAYARAMAN TAMIZHMURUGAN
Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN Date: 2026.06.02 19:36:48 +0530

நீதித்துறை நடுவர் எண். 1,
மன்னார்குடி.

**1.புகார்தாரர்/மனுதாரர் தரப்பு சாட்சிகள்:**

| சாட்சியின் வரிசை எண். | சாட்சியின் பெயர் | குறிப்பு |
|---|---|---|
| அசா.1 | அறிவழகன் | புகார்தாரர் சாட்சி |
| அசா.2 | தனராஜ் | கண்ணுற்ற சாட்சி |
| அசா.3 | அன்பழகன் | கண்ணுற்ற சாட்சி |
| அசா.4 | சந்திரன் | பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைப்படம் சாட்சி |
| அசா.5 | சி.தங்கதுரை | சிறப்பு உதவி ஆய்வாளர்(கூடுதல் சாட்சி) |

**2.புகார்தாரர்/மனுதாரர் அரசு தரப்பு சான்றாவணங்கள்:**

| **சான்றாவணங்களின் வரிசை எண்.** | **தேதி** | **சான்றாவணம் குறிப்பு** | **சான்றளிக்கப்பட்ட/ ஒப்பமிட்டவரின் விவரம்** |
|---|---|---|---|
| அசா.1 | 15.02.2017 | புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் மட்டும் | அ.சா.1 |
| அசா.2 | 25.05.2026 | சமரச மனு | அ.சா.1 |
| அசா.3 | 15.02.2017 | பார்வை மகசரில் உள்ள 1 வது கையொப்பம் | அ.சா.4 |
| அசா.4 | 15.02.2017 | புகார் | அ.சா.5 |
| அசா.5 | 15.02.2017 | முதல் தகவல் அறிக்கை | அ.சா.5 |
| அசா.6 | 15.02.2017 | பார்வை மகசர் | அ.சா.5 |
| அசா.7 | 15.02.2017 | வரைப்படம் | அ.சா.5 |
| அசா.8 | 15.02.2017 | சட்டப்பிரிவு மாற்று அறிக்கை | அ.சா.5 |

3. அரசு தரப்பு சான்று பொருள் : இல்லை

4. எதிரி தரப்பு சாட்சிகள் , சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருட்கள் : இல்லை

JAYARAMAN TAMIZHMURUGAN

Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.06.02 19:37:04 +0530

நீதித்துறை நடுவர் எண்.1,
மன்னார்குடி.

**குறிப்பு**

1) வழக்கு விசாரணையின்போது எதிரி பிணையில் இருந்தார்.

2) எந்த சாட்சிகளும் மூன்று முறைக்கு மேல் அழைக்கப்படவில்லை.

3)வழக்கின் முடிவு எதிரிக்கும் காவல்துறையினருக்கும் தெரிவிக்கப்பட்டது.

**நகல் பணிந்து சமர்பிக்கப்படுகிறது**

மாண்புமிகு குற்றவியல் தலைமை நீதித்துறை நடுவர் அவர்கள்,
திருவாரூர்.

JAYARAMAN TAMIZHMURUGAN

Digitally signed by JAYARAMAN TAMIZHMURUGAN
DN: cn=JAYARAMAN TAMIZHMURUGAN, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.06.02 19:37:15 +0530